வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 30.9.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி அக்டோபர் 2-ஆம் தேதி ஜார்கண்டில், 83 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பலான பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

தாதா சாகிப் பால்கே விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நடிகர் மிதுன் சக்கரவர்த்திக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் திருமதி அன்னபூரணா தேவி, ஜார்கண்ட் ஆளுநர் திரு சந்தோஷ் குமார் கங்வார் ஆகியோர், இன்று ராஞ்சியில் இருந்து நாட்டின் 11 ஆயிரம் திறன்மிகு அங்கன்வாடி மையங்களைத் தொடக்கி வைத்தனர்.

புதுச்சேரியில் ஆயுஷ்மான் பாரத்- இலவச மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் 6-ஆம் ஆண்டை ஒட்டி, இன்று நடைபெற்ற விழிப்புணர்வு நடைபயணத்தை, முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

மோடி-ஜார்கண்ட்

பிரதமர் திரு நரேந்திர மோடி அக்டோபர் 2-ஆம் தேதி ஜார்கண்டில் 83 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பலான பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைத்து வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். இப்பயணத்தின் போது ஹசாரிபாக்-கில் நடைபெறும் விழாவில், பழங்குடி கிராமங்களை 79 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மேம்படுத்துவதற்கான தர்த்தி ஆபா இயக்கத்தை அவர் தொடக்கி வைக்கிறார். நாடு முழுவதும், 549 மாவட்டங்களுக்கு உட்பட்ட 63 ஆயிரம் கிராமங்களில் அமலாக உள்ள இத்திட்டத்தினால், 5 கோடிக்கும் மேற்பட்ட பழங்குடி மக்கள் பயன் பெறுவார்கள்.

அக்டோபர் 2-ஆம் தேதி 40 ஏகலவ்யா பள்ளிகளை பிரதமர் திறந்து வைத்து, மேலும் 25 ஏகலவ்யா பள்ளிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார். பழங்குடி மக்களுக்கான பிரதமரின் **ஜன்-மன்** இயக்கத்தின் கீழ், ஆயிரத்து 360 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை பிரதமர் தொடக்கி வைத்து இத்தகைய வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். சாலைகள், அங்கன்வாடிகள், பல்நோக்கு மையங்கள் மற்றும் மாணவர் விடுதிகளை அமைக்கும் பணிகள் இதில் அடங்கும்.

3 ஆயிரம் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 75 ஆயிரத்து 800 பழங்குடி வீடுகளுக்கு மின் இணைப்பு, 5 ஆயிரத்து 550 பழங்குடி வீடுகளுக்கு குழாய் மூலமான குடிநீர் இணைப்பு, பழங்குடிப் பகுதிகளுக்கு 275 நடமாடும் மருத்துவ ஊர்திகள், மற்றும் 500 அங்கன்வாடி மையங்கள் உட்பட, பிரதமரின் ஜன்-மன் இயக்கத்தின் கீழ் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள பல்வேறு சாதனைத் திட்டங்களையும் பிரதமர் தொடக்கி வைக்கிறார்.

*மிதுன் சக்கரவர்த்தி*

திரையுலக சாதனையாளர்களுக்கான நாட்டின் மிக உயரிய தாதா சாகிப் பால்கே விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நடிகர் மிதுன் சக்கரவர்த்திக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். நாட்டின் கலாச்சார அடையாளங்களில் ஒன்றாக திகழும் நடிகர் மிதுன் சக்கரவர்த்தி, பன்முக நடிப்பிற்காக, பல தலைமுறையினரால் போற்றப்படுவர் என்றும் இந்திய திரை உலகிற்கு அவர் ஆற்றி உள்ள ஈடு இணையற்ற பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், தாதா சாகிப் பால்கே விருது அவருக்கு வழங்கப்படுவதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார். அடுத்த மாதம் நடைபெற உள்ள 70-ஆவது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில், புகழ் பெற்ற நடிகர் திரு மிதுன் சக்கரவர்த்திக்கு தாதா சாகிப் பால்கே விருது வழங்கப்படும் என, முன்னதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் சமூக ஊடகத்தில் அறிவித்தார். கொல்கத்தா நகரின் வீதிகளில் இருந்து திரையுலகின் உச்சங்களை எட்டிய மிதுன் சக்கரவர்த்தியின் கலைப் பயணம் பல தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கும் என்று அவர் கூறி உள்ளார். தாதா சாகிப் பால்கே விருதுக்கு தாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது குறித்து மிதுன் சக்கரவர்த்தி மகிழ்ச்சி

வெளியிட்டுள்ளார். தமது குடும்பத்தினர் மற்றும் உலகெங்கிலும் உள்ள ரசிகர்களுக்கு இந்த விருதை அர்ப்பணிப்பதாக அவர் கூறி உள்ளார்.

முர்மு

2023-ஆம் ஆண்டுப் பிரிவைச் சேர்ந்த ஐபிஎஸ் பயிற்சி அதிகாரிகளின் குழு ஒன்று, இன்று புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை சந்தித்தது. அனைத்து அகில இந்திய பணிகளுக்கு இடையே இந்திய காவல் பணிக்கு தனி முக்கியத் துவம் இருப்பதாக குடியரசு தலைவர் கூறினார். சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்தினால் மட்டுமே சமூகப் பொருளாதார வளர்ச்சி சாத்தியமாகும் என்றும், வரவிருக்கும் ஆண்டுகளில் புதிய உயரங்களை எட்டும் இலக்குடன் இந்தியா செயல்பட்டு வரும் நிலையில், ஐபிஎஸ் அதிகாரிகளின் பங்கு பணிகள், இன்னும் அதிக முக்கியத் துவம் பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார். சட்டம்-ஒழுங்கை பராமரிக்காமல், குடிமக்களின் உரிமைகளை பாதுகாக்காமல் விட்டுவிட்டால், வளர்ச்சி என்பதற்கு பொருளே இராது என்றும் குடியரசு தலைவர் கூறினார்.

ஊட்டச் சத்து மாதம்

நாடு முழுவதும் 11 ஆயிரம் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள **திறன்மிகு அங்கன்வாடி மையங்களை**, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூரணா தேவி, ஜார்கண்ட் ஆளுநர் திரு **சந்தோஷ் குமார் கங்வார்** ஆகியோர் இணைந்து, இன்று ராஞ்சியில் இருந்து மெய்நிகர் முறையில் தொடக்கி வைத்தனர். 7-ஆவது தேசிய ஊட்டச்சத்து மாதத்தின் நிறைவை ஒட்டி, ராஞ்சியில் இன்று நடைபெற்ற தேசிய அளவிலான விழாவில் மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி பேசுகையில் நாட்டில் ஊட்டச்சத்து குறைபாட்டை முற்றிலுமாக அகற்றுவதே ஊட்டச் சத்து மாதத்தின் நோக்கம் என்றார். ரத்தசோகை நோய் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தொழில் நுட்ப அடிப்படையிலான பல்வேறு முன் முயற்சிகளுக்கும், **ஊட்டச்சத்துடன் கூடிய கல்வி** என்பதற்கும், தேசிய ஊட்டச்சத்து மாதத்தில் முக்கியத் துவம் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார். இந்த ஒரு மாத காலத்தில் 11 கோடிக்கும் மேற்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அங்கன்வாடி மையங்களின் அனைத்து ஊழியர்களும் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் சேர்க்கப்படுவதாக அமைச்சர் திருமதி அன்னபூரணா தேவி அறிவித்தார். ஆரோக்கியம் மற்றும் அதிகாரத்துடன் கூடிய

பெண்கள் மூலமாகவே முன்னேறிய இந்தியாவை உருவாக்க முடியும் என்றும், இதைக் கருத்தில் கொண்டே, பெண்களை தலைமையாக கொண்ட வளர்ச்சியை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி வருவதாகவும், அவர் கூறினார். பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கான மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறையின் பல்வேறு திட்டங்களுக்கு பட்ஜெட்டில் 3 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

*ஆயுஷ்மான் பாரத்*

புதுச்சேரியில் **ஆயுஷ்மான் பாரத்- இலவச மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்** அமலாக்கம் 6-ஆம் ஆண்டை எட்டி இருப்பதை ஒட்டி, இன்று மத்திய-மாநில அரசுகள் இணைந்து நடத்திய **ஆயுஷ்மான் பாரத் இருவார விழா நடைபயணத்தை** முதலமைச்சர் திரு ரங்கசாமி கொடி அசைத்து தொடக்கி வைத்தார். சுகாதாரத் துறை துணை இயக்குநர் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர். இந்திராகாந்தி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் இதர மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 200 மருத்துவ மாணவர்கள் இந்த நடை பயணத்தில் பங்கேற்று ஆயுஷ்மான் பாரத்- இலவச மருத்துவ காப்பீட்டு திட்டம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். புதுச்சேரியில் 5 லட்சத்து 10 ஆயிரத்து 922 பயனாளிகள் இத்திட்டத்திற்கு பதிவு பெற்றுள்ளதாகவும் 95 ஆயிரத்து 520 பயனாளிகள், 76.54 கோடி ரூபாய் அளவிற்கு பயன் அடைந்துள்ளதாகவும் புதுச்சேரி அரசின் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

*வடிகால்-ரங்கசாமி*

புதுச்சேரியில், மரப்பாலம் சந்திப்பில் இருந்து, முருங்கப்பாக்கம் சந்திப்பு வரையிலான தேசிய நெடுஞ்சாலையை மேம்படுத்தி விரிவாக்கம் செய்யும் பணிகளை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். 2 கோடியே 25 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான இப்பணிகளை 4 மாத காலத்தில் முடிக்க பொதுப் பணித்துறை திட்டமிட்டுள்ளது.

முருங்கப்பாக்கம் கல்வெட்டில் இருந்து அரியாங்குப்பம் பழைய பாலம் வரையிலும், பழைய பாலத்தில் இருந்து அரியாங்குப்பம் தேவாலயம் வரையிலும், மற்றும், அரியாங்குப்பம் சிக்னலில் இருந்து புதிய பாலம் வரை விடுபட்ட பகுதிகளிலும் சாலையோரத்தில் U வடிவ வடிகால் அமைக்கும் பணிகளை இன்று முதலமைச்சர் திரு ரங்சகாமி பூமி

பூஜை செய்து தொடக்கி வைத்தார். 2 கோடியே 58 லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான இப்பணிகளை 6 மாத காலத்தில் முடிக்க பொதுப் பணித்துறை திட்டமிட்டுள்ளது.

மரப்பாலம் முதல் தேங்காங்திட்டு மேட்டுத்திட்டு வரை உள்ள சாலையை, 2 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தி விரிவாக்கம் செய்யும் பணிகளையும் முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், மற்றும் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகள் மற்றும் உள்ளூர் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

*சக்கர நாற்காலி-ரங்கசாமி*

**இந்திய சக்கர நாற்காலி கூடைப் பந்துக் கூட்டமைப்பு** சார்பில் குவாலியரில் அக்டோர் 5 முதல் 8-ஆம் தேதி வரை நடைபெற உள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான, 8-ஆவது தேசிய கூடைப்பந்து போட்டிகளின் பெண்கள் பிரிவில், புதுச்சேரி சார்பில், 10 **மாற்றுத் திறனாளி வீராங்கனைகள்** பங்கேற்க உள்ளனர். **புதுச்சேரி சக்கர நாற்காலி கூடைப்பந்து சங்கத்தின்** பொதுச் செயலர் திரு சிவக்குமார் தலைமையில் இக்குழுவினர் குவாலியர் சென்று வருவதற்கான பயணச் செலவாக, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்து 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வழங்கினார்.

*வர்த்தக கொள்கை*

**இந்தியாவில் தயாரிப்போம்** திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் மத்திய தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சகம் வர்த்தக சீர்திருத்தங்களுக்கான புதிய செயல் திட்டம் ஒன்றைக் கொண்டு வர உள்ளது. நாடு முழுவதற்குமான, தடையற்ற ஒழுங்குமுறைக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதன் மூலம் வர்த்தகம் புரிவதை எளிமையாக்க, இந்த செயல் திட்டம் உதவும் என அமைச்சகம் தெரிவித்துள்ளது. விதிமுறைகளுக்கு இணங்குவதில் வர்த்தகர்கள் மீதான சுமையை குறைக்கவும் உலகின் முக்கிய முதலீட்டு கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்தும் வகையிலான டிஜிட்டல் தீர்வுகளை அமல்படுத்தவும் புதிய செயல் திட்டத்தில் முக்கியத் துவம் அளிக்கப்படும். ஏற்கனவே 2014-15-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட வர்த்தக சீர்திருத்தங்களுக்கான

செயல்திட்டம், நாட்டின் வர்த்தகச் சூழலுக்கு மறுவடிவம் கொடுப்பதில், முக்கிய சக்தியாக செயல்பட்டு இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

*காவிரி-குமாரசாமி*

காவிரி பிரச்சனையை அரசியலாக்க கூடாது என்று, மத்திய கனரக தொழில் துறை அமைச்சர் திரு எச் டி குமாரசாமி கூறி உள்ளார். இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் போதிய மழை பெய்தால் காவிரி நீரைப் பகிர்ந்து கொள்வதில் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், விவசாயிகள் நிலைமைகளை புரிந்து கொண்டு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் பிரச்சனைகளுக்கு சுமுகத் தீர்வு காண வேண்டும் என்றும் கூறினார். ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் தரிசனம் செய்த பின்னர் அமைச்சர் திரு குமாரசாமி சேலம் புறப்பட்டுச் சென்றார். 1970-ஆம் ஆண்டில் தொடக்கப்பட்ட சேலம் உருக்காலை இன்றைய தேவைகளுக்கு ஏற்றபடி புத்தாக்கம் செய்யப்படும் என அவர் கூறினார். தொடர்ந்து சேலம் உருக்காலையில் அவர், அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தினார். உருக்காலை ஒன்றில் மரக் கன்று ஒன்றையும் அவர் நட்டு வைத்தார்.

*பஞ்சாயத்து*

பஞ்சாயத்து அளவிலான வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கத் தேவையான திறன்களை மக்கள் பிரதிநிதிகள் அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட இதர தரப்பினருக்கு வழங்கும் வகையில், **அனைவரின் திட்டம்- அனைவரின் வளர்ச்சி** என்ற தலைப்பில் அரசு திட்டமிட்டுள்ள பிரச்சார இயக்கம் பற்றிய தேசிய பயிலரங்கு ஒன்றை, மத்திய பஞ்சாயத்து ராஜ் இணை அமைச்சர் பேராசிரியர் எஸ்பி சிங் பகேல், புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். அடுத்த நிதியாண்டிற்கான பஞ்சாயத்து அமைப்புகளின் வளர்ச்சி திட்டங்களை, இந்த இயக்கம் மூலமாகத் தயாரிப்பது பற்றிய கையேடு ஒன்றையும், அமைச்சர் வெளியிட்டார். தேசிய கிராம சுயராஜ்ய இயக்கம் பற்றிய ஆண்டறிக்கையும் நிகழ்ச்சியின் போது வெளியிடப்பட்டது.

*வானொலி*

இந்திய தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையம், தனியார் வானொலி நிலையங்களுக்கான **டிஜிட்டல் வானொலி ஒலிபரப்புக் கொள்கையை** உருவாக்குவது குறித்த ஆலோசனை ஆவணத்தை இன்று வெளியிட்டு, சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துக்களை நாடி

உள்ளது. சம்பந்தப்பட்ட தரப்பினர் தங்களின் கருத்துக்களை அக்டோபர் 28-ஆம் தேதிக்குள் எழுத்து மூலம் தெரிவிக்கலாம் என்றும் எதிர்க் கருத்து உள்ளவர்கள் நவம்பர் 11-ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகாஷ்வாணி தனது மத்திய அலை மற்றும் சிற்றலை வானொலி ஒலிபரப்புக் கட்டமைப்பை டிஜிட்டல் மயமாக்கும் பணிகளை ஏற்கனவே தொடக்கி இருப்பதும், ஆகாஷ்வாணியின் 38 ஒலிபரப்பு கோபுரங்கள், டிஜிட்டல் டிரான்ஸ்மிட்டர்களாக மாற்றப்பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி அக்டோபர் 2-ஆம் தேதி ஜார்கண்டில், 83 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பலான பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

தாதா சாகிப் பால்கே விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நடிகர் மிதுன் சக்கரவர்த்திக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் திருமதி அன்னபூரணா தேவி, ஜார்கண்ட் ஆளுநர் திரு சந்தோஷ் குமார் கங்வார் ஆகியோர், இன்று ராஞ்சியில் இருந்து நாட்டின் 11 ஆயிரம் திறன்மிகு அங்கன்வாடி மையங்களைத் தொடக்கி வைத்தனர்.

புதுச்சேரியில் ஆயுஷ்மான் பாரத்- இலவச மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் 6-ஆம் ஆண்டை ஒட்டி, இன்று நடைபெற்ற விழிப்புணர்வு நடைபயணத்தை, முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 30.9.2024/Script.

-----------------------------